17th October 1964]

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சார், இந்த மாடர்னேஸிங் சிஸ்டப்படி செமண்ட் காங்க்ரீட் போட்டு நல்ல முறையிலே பூசினால், கசிவு இருப்பதில்லை. ஆகவே அப்படிச் செய்து அங்கெல்லாம் அனுமதி கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அதைத்தான் பி.ஏ.பி. ஸ்கீம் சம்பந்தமாக சொல்லும்போது குறிப்பிட்டேன் ; நீர்க்கசிவு ஏற்படுமா ஏற்படாதா என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று சொன்னேன்.

வாழை, வெற்றிலை பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்

* 16 கேள்வி.—*திரு. து. ப. அழகமுத்து* : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1964 ஏப்ரல் 17-ந் தேதி அடித்த காற்றின் காரணமாக, வாழை, வெற்றிலை, திராக்ஷை பயிர்கள் எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டது ?

(இ) அதன் மூலமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

(உ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சர்க்காரால் என்னென்ன உதவிகள் செய்யப்பட்டுள்ளன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Plantain and betel vine crops in an extent of 91.82 acres and 11.00 acres respectively were damaged by heavy winds on 17th April 1964 in Tiruchirappalli district.

(*b*) The total value of the crops damaged was estimated at Rs. 50,000.

(*c*) No relief was given to the affected ryots as no single ryot was affected to such a great extent as to warrant assistance from the Government.

திரு. து. ப. அழகமுத்து : விவசாயிகள் உதவி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அப்படி வந்ததாகத் தகவல் இல்லை.

திரு. அ. ராமசந்திர ராயர் : சார், தென்னாற்காடு ஜில்லாவில் எவ்வளவு ஏக்கரா பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு வெ. ராமையா : இது திருச்சி ஜில்லா பற்றிய கேள்வி, சார்.

MR. SPEAKER : The main question relates to Tiruchirappalli district. The hon. Minister has not got statistics about all the districts.